**தலைப்பு 217 – நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது

வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என நான் தெரிவிக்கின்றேன்

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட முற்பண பெறுவனவுகள், முற்பணக் கொடுப்பனவுகள், வைப்புக்கள், பெறுவனவு, வைப்பிலிருந்து கொடுப்பனவு மீதிகளுக்குரிய திறைசேரி கணனி அச்சீட்டு குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதி மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிட்டப்பட்டிருந்த பெறுமதிக்கு இடையே பின்வருமாறு வேறுபாடுகள் காணப்பட்டன. இவ்வேறுபாடுகளுக்காக காரணங்கள் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. | வேறுபாடுகளுக்காக காரணங்கள் தெளிவான வகையில் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக் கூற்று சமர்ப்பிக்கும் போது இம்மீதிகளை சரியாக உள்ளடக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| விபரம் | திறைசேரி அட்டவணைகளில் குறிப்பிட்ட பெறுமதி<br>ரூபா | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி<br>ரூபா |
|---|---|---|
| முற்பண பெறுவனவு | 12,229,502 | 11,453,220 |
| முற்பணக் கொடுப்பனவு | 9,749,174 | 9,005,603 |
| வைப்புக்கள் பெறுவனவு | 2,471,212 | 1,072,939 |
| வைப்புக்கள் கொடுப்பனவு | 2,436,741 | 1,038,468 |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் மூலதனச் சொத்துக்கள் கையேற்பின் ரூபா 1,559,889 ஆன செலவினமொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிதியல்லாத | வேறுபாடுகளுக்காக காரணங்கள் தெளிவான | நி.பி 208 இன் கீழ் மாவட்ட மற்றும் பிரதேச |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அப்பெறுமதி ரூபா 1,132,132 ஆக இருந்த காரணத்தினால் ரூபா 427,757 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வகையில் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். | செயலகங்களுக்காக ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாடுகளின் கீழ் அந்த அலுவலகங்களால் கொள்வனவுகளில் உள்ளடக்கப்பட்டமை காரணமாக இவ் வேறுபாடு உருவாகியிருந்தது. |
| (இ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக ரூபா 4,605,474 என குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மாதாந்த கணக்கு குறிப்பின் பிரகாரம் அது ரூபா 14,453,228 ஆக இருந்தமையால் அது ரூபா 9,847,754 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. வேறுபாட்டிற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | வேறுபாடுகளுக்காக காரணங்கள் தெளிவான வகையில் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியாக உள்ளடக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**1.6.2 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | | |
| | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502 (2) பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502 (2) பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு உரித்தாகும் வரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்துடன் பராமரித்து நாளது வரையாக்கப்பட வேண்டும். | நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிணை பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல் உள்ளடக்கப்பட்ட பிணைப்பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்படும் வகையில் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப்பதிவேடு பேணப்பட வேண்டும். | பேணிச்செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு<br>------------------------------------------------------ | | |
| | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டதன் அரச கட்டிடங்களில் சகல மின் உபகாகங்கள் தொடர்பான பொருட் பதிவேடொன்று பேணப்பட வேண்டும் | தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு<br>------------------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழான மாதிரியின் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | பேணிச்செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (உ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு<br>------------------------------------------------------- | | |
| | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் நாளாந்தம் பரீட்சிக்ககூடிய வகையில் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டில் அப்பொறுப்புக்களை பதிவுசெய்தல் வேண்டும். | பேணிச்செல்லுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 3 செலவின விடயங் களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நிதிஏற்பாடுகளில் 29 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தன. | மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | சிக்கனமாக இருந்ததமை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட தேவைப்பாடு உருவாகாமை |
| (ஆ) | 2 செலவின விடயங்களின் கீழ் மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 49,789,176 ஆன நிதி ஏற்பாடுகளில் செலவிடப்பட்ட செலவினம் பேரேட்டின் | மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிதிஏற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்ட செலவினம் வாக்குப் பண பேரேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | வாக்குப் பண பேரேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை வேண்டும். |

உள்ளடக்கப்படாமை காரணமாக செலவினப் பேரேட்டின் எண்ணிக்கை திறைசேரி கணனி அச்சீட்டில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிட முடியாதிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு இணங்க அநாதையான, கைவிடப்பட்ட மற்றும் கவனிப்பாரற்ற பிள்ளைளினதும், சட்ட ரீதியான பிரச்சனைகளுக்கு உள்ளாகிய சிறுவர்களினதும் உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கு சமமான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் திணைக்களத்தின் செயற்பணியாகும். எனினும் 1956 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களம் 62 வருடங்கள் கடந்திருந்த போதிலும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் சர்வதேச விஞ்ஞாபனங்களுக்கு இணங்க தேசிய கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் அதற்குரிய சட்ட வழங்கல்கள் என்பன 2018 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | செயற்பணிக்கு இணங்கும் வகையில் செயற்படுத்துவுதற்காக தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | மாற்று பாதுகாப்பு கொள்கையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.2 செயற்பாடுகளை நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சிறுவர்களின் சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 51 மில்லியன் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் செயன்முன்னேற்றத்தை | | நாட்டில் ஏற்பட்ட சீரற்ற நிலைமை காரணமாக ஒரு |

| | | | |
|---|---|---|---|
| | பரீட்சித்தபோது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | நிகழ்ச்சித்திட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. |
| | சிறுவர்களின் சமூக பாதுகாப்பினை பலப்படுத்தும் நோக்கில் 25 மாவட்டங்களில் 25 செயலமர்வுகளை செயற்படுத்துவதற்காக ரூபா 405,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 115,000 செலவிடப்பட்டு செயலமர்வொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டும் | |
| (ஆ) | தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் கூட்டிணைப்பினை மேம்படுத்துவதற்கான 18 குழுக்களை உருவாக்குவதற்கு ரூபா 1,100,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 22,000 செலவிடப்பட்டு 2 குழுக்கள் மாத்திரம் ஏற்பட்டிருந்தது. | | 2018 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் மாகாண மட்டத்தில் குழுக் கூட்டங்கள் நடாத்த முடியாமல் இருந்ததுடன், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செலவு செய்ய முடியவில்லை. |
| (இ) | தேசிய அலுவலகர் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமை மேம்படுத்துதல் உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக 11 நிகழ்ச்சித் திட்டங்களை 3 நாட்கள் நடாத்துவதற்கு ரூபா 1,000,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த துடன், ரூபா 303,000 செலவிடப்பட்டு நிகழ்ச்சித் திட்டமொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | | வெளிநிறுவனங்களின் உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்துவதில் உள்ள சிக்கல் காரணமாக ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியாமல் போயிருந்தன. |
| (ஈ) | மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் குழுக்களின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான கைநூலினை அச்சிடல், சிறுவர்களுடன் செயற்படும் சகல உத்தியோகத்தர்களுக்காக மாவட்டத்திற்கு ஒன்று வீதம் இரண்டு நாட்கள் தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்துதல், சிறுவர்களுடன் தொடர்புபடும் நிறுவனங்கள் மற்றும் நபர்களின் இயலுமையை அபிவிருத்தி செய்வதற்காக 6 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதுல் போன்ற செயற்பாடுகளுக்காக ரூபா 3.6 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்பட வேண்டும் | உத்தியோகத்தர்கள் இடமாற்றம் மற்றும் அக்காலத்தில் காணப்பட்ட சீரற்ற காலநிலை நிலைமை காரணமாக நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்தையும் செய்ய முடியாதிருந்தது. |
| (உ) | சமூகத்தில சிறுவர்களின் பாதுகாப்பினை பலப்படுத்துவதற்காக ரூபா 1,780,000 | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க | |

| | | | |
|---|---|---|---|
| | நிதி ஏற்பாடுகளுடன் மீளாய்வாண்டின் செயல்ந டவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 3 நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | செயற்படுத்தப்பட வேண்டும் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஊ) | திணைக்களத்தின் பிரதான செயற்பாடொன்றான மாகாண நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் செயற்பாடுகளை கூட்டிணைத்தல், ஒத்துழைப்பு வழங்குதல், செயன்முன்னேற்றத்தை விசாரித்தல் மற்றும் அதன் கீழ் செயற்படுத்தும் வெவ்வேறு நிறுவனங்களுக்காக வழிகாட்டல் என்பன மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளாக இருப்பதால் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். | |